கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

STC No.46 /2023

நாள்.21.08 .2026 ம..சா.1 செல்வரெஜி

த/பெ பெருமாள் நாடார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, எதிரி தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

1) உங்கள் கணவர் எதிரிக்கு அனுப்பி சட்ட அறிவிப்பில் நான் உடன் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. உங்களுடைய கணவர் வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் காசோலை சம்மந்தமாக எனது மனைவிக்கு தெரியும் என்று புகாரில் குறிப்பிடவில்லை என்றால் அப்பொழுது அவசியம் ஏற்படவில்லை என்று சாட்சி பதில் கூறுகிறார். உங்கள் கணவர் மீது காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி புகார் மனுவில் மனு தொடர்பாக நானும், எனது கணவரும் உடன் காவல் நிலையம் சென்றோம் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் என்ன விசாரணை செய்தார் என்றால் காசோலை தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் அங்கு சென்று பார்த்து கொள்ளுங்கள் என்று கூறிவிட்டார். காவல் நிலையத்தில் அளித்துள்ள வாக்குமூலத்தில் கூட உங்களுக்கு காசோலை கொடுத்த விவரம் தெரியும் என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எதிரி எத்தனை ஆண்டுகள் வெளிநாட்டில் இருந்தார் என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் எதிரி வெளிநாட்டில் இருந்தவிவரம் தெரியும், ஆனால் எத்தனை ஆண்டுகள் இருந்தார் என்பது தெரியாது.

2) எதிரியின் மனைவி என்ன வேலை செய்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரிக்கு உடன் பிறந்தவர்கள் எத்தனைபேர் என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரிக்கு சொந்த ஊர் என்ன என்று தெரியுமா என்றால் காவல்கிணறு ஆகும். நீங்கள் இந்த வழக்கு காசோலை சம்மந்தமாக உங்கள் கணவருக்கும் எதிரிக்கும் இடையே எந்தவிதமான பணபரிவர்த்தனையும் கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு காசேலையை எதிரி உங்கள் கணவரிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி அரசுக்கு கணக்கு காட்டக்கூடிய NRI கணக்கு பராமரிப்பாளர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உங்களுக்கு காசோலை தொடர்பாக எதுவும் தெரியாது என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரி 20 ஆண்டு

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.08.21 17:44:45 +0530

காலம் வெளிநாட்டில் வேலை செய்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரிக்கு உங்கள் கணவரிடம் காசோலை கொடுத்து பணம் பெறவேண்டி அவசியம் ஏதும் கிடையாது என்றால் சரியல்ல. எதிரியின் மனைவி ஆசிரியராக பணியாற்றி வருகிறார் என்றாலும், அதனால் உங்கள் கணவரிடம் வழக்கு காசோலை கொடுத்து கடன் பெறவில்லை என்றாலும் உங்கள் கணவருக்கும் எதிரிக்கும் இடையே காசோலை தொடர்பாக எந்த பணபரிமாற்றமும் கிடையாது என்றாலும் சரியல்ல.

3) எதிரிக்கு சொந்த ஊர் கன்னியாகுமரி மாவட்டம் கீரிவிளை என்றாலும் எதிரிக்கும், உங்கள் கணவருக்கு எந்த தொடர்பும் கிடையாது என்றாலும் சரியல்ல. உங்கள் மாத வருமானம் ரூ.1 இலட்சம் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் அது பற்றிய ஞாபகம் இல்லை. உங்களுடைய மற்றும் உங்களுடைய கணவர் வருமான வரி கணக்குகளை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. கொரனா காலகட்டத்தில் உங்கள்வங்கி கணக்கில் எவ்வளவு வைப்பு தொகை உள்ளது என்றால் அது பற்றி ஞாபகம் இல்லை. உங்களுடைய வங்கி கணக்கு எண் சொல்ல இயலுமா என்றால் ஞாபகம் இல்லை. நீங்கள் உங்கள் முதல் விசாரணை வாக்குமூலத்தில் பொய்யாக மாத வருமானம் ரூ.1 இலட்சம் என்று பொய்யாக கூறியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் முதல் விசாரணை வாக்குமூலத்தில் மாதம் வருமானம் ரூ.1 இலட்சம் என்று குறிபிட்டுள்ளேன் என்றால் சரிதான். கொரனா காலகட்டத்தில் வாழ்வாதரத்திற்கு கஷ்டகூடிய காலத்தில் உங்கள் கணவர் எதிரியிடம் காசோலை பெற்று ரூ.1 இலட்சம் கடன் கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

4) உங்களுக்கு போதிய வருமானம் இல்லை என்பதால் தான் வருமான வரி கணக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தீலிப்குமாரை உங்களுக்கு தெரியுமா என்றால் சாட்சி தெரியும் என்று பதில் கூறுகிறார். என்னுடைய மகன் வினோத் மீது குற்ற வழக்கு உள்ளதா என்றால் உள்ளது. தீலிப்குமார் மீது ஆள்கடத்தல் வழக்கு, கட்ட பஞ்சாயத்து வழக்கு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி உங்களுக்கு வழக்கறிஞர் மறுப்பு அறிவிப்பு அனுப்பி இருந்தார் என்றால் சரிதான். மேற்படி மறுப்பு அறிவிப்பில் தீலிப்குமார் பற்றிய விவரம் சொல்லி இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரியின் மனைவிதான் மறுப்பு

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.08.21 17:44:51 +0530

அறிவிப்பு அனுப்பி உள்ளார் என்றாலும், வழக்கு பற்றி உங்களுக்கு ஏதும் தெரியாது என்றாலும் சரியல்ல. எதிரியின் உடன் பிறந்த சகோதர் ராஜேஷ் என்பவரை தெரியுமா என்றால் எதிரியின் சகோதரர்களை தெரியும், ஆனால் ராஜேஷ் என்ற பெயர் தெரியாது என்று சாட்சி கூறுகிறார். எதிரியின் சகோதரர் ராஜேஷ் என்பவரின் சொத்தை எதிரிக்கு பஞ்சாயத்து பன்னி வாங்கி தருவதாக தீலிப்குமார் சொல்லி மேற்படி காசோலையை வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் காசோலையை தான் தீலிப்குமாரும், உங்களுடைய கணவர், மகனும் கூட்டாக சேர்ந்து உண்மைக்கு மாறாக தேதி, கையொப்பம் போட்டு சட்டவிரோதமாக வங்கியில் உங்கள் கணவர் மூலமாக செலுத்தியுள்ளீர்கள் என்றால் சரியல்ல.

5) தீலிப்குமார் எதிரியிம் சொன்னபடி குறிப்பிட்ட தேதிக்குள் சொத்தை முடித்து தராத காரணத்தால் எதிரி மேற்படி காசோலையை 14.12.2021 தேதியில் Stop payment செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீங்கள் மேற்படி காசோலையை மோசடியாக பயன்படுத்திய காரணத்தினால் தான் தீலிப்குமார் மீதும், உங்கள் கணவர் மீது காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் சரியல்ல. எதிரி தனது காசோலையை சட்டவிரோதமாக பயன்படுத்தியதாக பணகுடி காவல்நிலையத்தில் ஆஜர் ஆகி தீலிப்குமார் பேசிய ஆடியோ ஆதாரங்களை சமர்பித்துள்ளார் என்றால் சரியல்ல. இதன் காரணமாக தான் உங்களுடைய மகன் தீலிப்குமார் துண்டுதலின்பேரில் எதிரியை கொலைமிரட்டல் செய்து மேற்படி வழக்கில் உங்களுடைய மகன் ஆஜராகவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் கொடுத்த கடனை கேட்டு எனது மகன் தொலைபேசி மூலம் எதிரியிடம் கேட்டதால் தான் மேற்படி புகார் அளிக்கப்பட்டது என்று சாட்சி பதில் கூறுகிறார். ஏற்கனவே உங்கள் கணவர் மீதும், தீலிப்குமார் மீதும் புகார் அளித்ததில் உங்கள் கணவரும், தீலிப்குமாரும் ஆஜராகவில்லை என்றால் சரியல்ல.

6) உங்கள் கணவர் இறந்தபிறகு காசோலை தொடர்பாக எனது கணவர் தொடுத்த வழக்கின் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 07.11.2021 தேதியில் கொரனா காலகட்டத்தில் எதிரி அவசர செலவிற்காக கடன் பெற்றார் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த தேதியில் எதிரியின் வங்கி கணக்கில் போதிய தொகை இருந்தது என்றாலும், வழக்கிற்காக பொய்யா சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும்

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.08.21 17:44:55 +0530

சரியல்ல. வழக்கு காசோலை எண் தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கு காசோலை எண்.225327 எதிரி எந்த காலத்திலும் உங்கள் கணவருக்கு கொடுத்தது கிடையாது என்றாலும், உங்கள் கணவரிடம் இருந்து கடன் பெற்றது கிடையாது என்றாலும் சரியல்ல. சட்டவிரோதமாக உங்கள் கணவர், உங்களுடைய மகன் வினோத் மற்றும் தீலிப்குமார் ஆகியோர்கள் சேர்ந்து நியாயமற்ற முறையில் பரிவர்த்தனை செய்ததால் தான் Stop payment செய்தார் என்றால் சரியல்ல. உங்களுடைய கணவர் இறந்தபிறகு உங்கள் மகன், தீலிப்குமார் சேர்ந்து எதிரி மிரட்டி பணம் பெறவேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யான வழக்கை நடத்தி வருகிறீர்கள் என்றால் சரியல்ல. வழக்கில் சொல்லியுள்ள அனைத்தும் பொய் சங்கதிகள், பொய் குற்றம் என்றால்சரி யல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து /படிக்க கேட்டு சரியென்று ஒப்பு கொண்டு கையெழுத்து செய்தார்

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.08.21 17:44:59 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

வள்ளியூர் (FAC)